Tamil / தமிழ்

# நச்சுத்தன்மை வாய்ந்த காட்டுக் காளான்கள்

> ஆபத்தான காட்டுக் காளான்கள், பொதுவாக இலையுதிர் கால முதல் மழைவீழ்ச்சிக்குப் பின்னர் தோன்றும்.

> புதர் நிலம், காடுகள், பொதுப் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், பாடசாலை மைதானங்கள், பண்ணைப் புல்வெளி மற்றும் வீட்டிற்கு அண்மையிலுள்ள உங்கள் சொந்தத் தோட்டப் புற்தரை, உரம், தழைக்கூளம் அல்லது வைக்கோல் உள்ளிட்ட பல இடங்களில் அவை காணப்படுகின்றன.

> நீங்கள் வெளிப்புறத்தில் இருக்கும்போது, உங்கள் குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை உன்னிப்பாகக் கண்காணித்துக் கொள்ளுங்கள், ஏனெனில் காளான்கள் எளிதில் எட்டிப் பறிக்கப்படக்கூடியவை மற்றும் சாப்பிடும் ஆர்வத்தைத் தூண்டும் தோற்றத்தைக் கொண்டவை.

> ஆஸ்திரேலியாவில் உள்ள நச்சுத்தன்மை வாய்ந்த காளான்கள், பார்ப்பதற்கு மற்ற நாடுகளில் காணப்படும் சாப்பிடக்கூடிய காளான்களைப் போலவே இருக்கும் என்பதை வெளிநாடுகளில் வசித்தவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

> சாவுத் தொப்பிக் காளான்கள் (Death cap mushrooms) என்பவைதான் மிகவும் ஆபத்தானவை மற்றும் இவை உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடிய கல்லீரல் பாதிப்பை ஏற்படுத்தும். சமைப்பதோ தோலுரிப்பதோ அதன் நஞ்சை அகற்றாது. சாவுத் தொப்பிக் காளான்கள், கருவாலி (oak), ஹேசல் (hazel) மற்றும் செஸ்ட்நட் (chestnut) மரங்களுடன் வளரும், ஆனால் ஆபத்தான காளான்களால் எங்கும் வளர முடியும். ஒரு நம்பகமான காய்கறிக் கடை அல்லது பல்பொருள் அங்காடியிலிருந்து நீங்கள் வாங்கும் காளான்கள் மட்டுமே உண்பதற்குப் பாதுகாப்பானவை.

> யாராவது தற்செயலாக ஒரு காட்டுக் காளானை சாப்பிட்டுவிட்டார்கள் என்றால், அறிகுறிகள் தோன்றும்வரை காத்திருக்க வேண்டாம். **13 11 26 என்ற எண்ணில் Poisons Information Centre எனும் நஞ்சுகள் பற்றிய தகவல் மையத்தை** அழைத்து, அவர்களின் ஆலோசனையைப் பின்பற்றவும். காட்டுக் காளான்களைச் சாப்பிட்ட பின்னர் நோய்வாய்ப்படும் எவரும், அவசர மருத்துவக் கவனிப்பை நாட வேண்டும்.
**அவசரகாலத்தில், எப்போதும் பூஜ்ஜியம்-பூஜ்ஜியம்-பூஜ்ஜியம் (000) என்ற எண்ணை அழைக்கவும்.**

## காட்டுக் காளான் நஞ்சினால் ஏற்படும் அறிகுறிகள் பின்வருமாறு:

> கடுமையான வயிற்றுளைவு

> வயிற்று வலி

> வாந்தி எடுத்தல்

> குமட்டல் உணர்வு

> வயிற்றுப்போக்கு

அறிகுறிகள் பொதுவாக காளானைச் சாப்பிட்டு 3-6 மணிநேரத்திற்குப் பின்னர் தொடங்கி, 3 நாட்கள் வரை நீடிக்கும்.

**மிகவும் ஆபத்தான காளான்கள், அவற்றைச் சாப்பிட்டு 24 மணிநேரத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கும் தாமதமான அறிகுறிகளைக் கொண்டிருக்கலாம்.**

**www.sahealth.sa.gov.au/mushroompoisoning**



Government of South Australia
SA Health

FIS: 22058